# டிசம்பர் – 21 – வெள்ளி

**புனித கனிசியஸ் இராயப்பர்**

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: திபா. 33:1**

--------------------------------------------------------------------

## முதல் வாசகம் : இனிமை மிகு பாடல் 2 : 8 – 14

என் காதலர் குரல் கேட்கின்றது இதோ, அவர் வந்துவிட்டார் மலைகள்மேல் தாவி வருகின்றார் குன்றுகளைத் தாண்டி வருகின்றார். என் காதலர் கலைமானுக்கு அல்லது மரைமான் குட்டிக்கு ஒப்பானவர். இதோ, எம் மதிற்சுவர்க்குப் பின்னால் நிற்கின்றார் பலகணி வழியாய்ப் பார்க்கின்றார் பின்னல் தட்டி வழியாய் நோக்குகின்றார். என் காதலர் என்னிடம் கூறுகின்றார் ”விரைந்தெழு, என் அன்பே! என் அழகே! விரைந்து வா. இதோ, கார்காலம் கடந்துவிட்டது மழையும் பெய்து ஓய்ந்துவிட்டது. நிலத்தில் மலர்கள் தோன்றுகின்றன் பாடிமகிழும் பருவம் வந்துற்றது காட்டுப் புறா கூவும் குரலதுவோ நாட்டினில் நமக்குக் கேட்கின்றது அத்திப் பழங்கள் கனிந்துவிட்டன் திராட்சை மலர்கள் மணம் தருகின்றன் விரைந்தெழு, என் அன்பே! என் அழகே! விரைந்து வா.” பாறைப் பிளவுகளில் இருப்பவளே, குன்றின் வெடிப்புகளில் இருக்கும் என் வெண்புறாவே! காட்டிடு எனக்கு உன் முகத்தை எழுப்பிடு நான் கேட்க உன் குரலை. உன் குரல் இனிது! உன் முகம் எழிலே!

**பதில்பாடல் :** நீதிமான்களே புதியதொரு பாடல் ஆண்டவருக்குப் பாடுங்கள்

## நற்செய்தி : லூக்கா 1 : 39 - 45

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில், ”பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” என்றார்.

**தியானம்:** வாழ்த்துவது என்பது பிறரை அவரது தகுதிக்கேற்ப புகழ்வது, பாராட்டுவது, அவரது மனிதத்தில் மகிழ்ச்சியடைவது. அவர் இறைவனின் பிள்ளை என்பதை ஏற்று அவரை உயர்த்திப் பேசுவது இப்படிப்பட்ட செயலைச்செய்யும் போது அதாவது பிறரை வாழ்த்தும் போது அங்கு இரு காரியங்கள் நடை பெறுகின்றன என்பதை இன்றைய நற்செய்தி விளக்குகிறது. மரியா எலிசபெத்தை வாழ்த்தியபோது இரண்டு நிகழ்வுகளைப் பார்க்கின்றோம் .1)குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. 2)எலிசபெத் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார். அதாவது பிறரை வாழ்த்தும் ஒவ்வொரு முறையும் நாம் பிறருக்கு அளவில்லா மகிழ்ச்சியுத்தருகின்றோம் .அதோடு மற்றவர்களுக்கு தூய ஆவியைத்தரும் கருவியாகவும் மாறுகின்றோம். நாம் பேசும் வார்த்தைகள் எப்படிப்பட்ட வார்த்தைகளாக இருக்கின்றன என்ற கேள்வியை நாம் சிந்திக்க இன்றைய நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கிறது. இறைவார்த்தைக்கு வல்லமை உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதே போல மனிதர்களாகிய நமது வார்த்தைக்கும் வல்லமை உண்டு என்பதை நாம் உணர்வது அவசியம் . அவற்றால் பிறரில் நேர்மறையான தாக்கங்களையோ அல்லது எதிர்மறையான தாக்கங்களையோ நம்மால் ஏற்படுத்த முடியும். பல வேளைகளில் நம் பேச்சு பிறருக்கு துன்பத்தையும் துயரத்தையும், வேதனையையும் தரக்கூடிய பேச்சாக இருக்கிறது, என்பது நாம் அறிந்த உண்மை. ஆனால் அன்னை மரியாவோ எலிசபெத்தம்மாவை வாழ்த்தியதாகவும் இவ்வாழ்த்துரை அவர்களுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாகவும் இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கிறது. நம் வார்த்தைகள் காயப்படுத்தும் வார்த்தைகளாக அல்ல வாழ்த்தின் வார்த்தைகளாக மாற்ற அழைக்கப்படுகின்றோம்.